# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2467/52 - 2025 දෙසැම්බර් මස 17 වැනි බදාදා - 2025.12.17

*2467/52 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க,**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்
மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2025, திசெம்பர் 17.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2025 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, மோட்டார் வாகன (சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலத்தைத் தற்காலிகமாக நீடித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (203 ஆம் அத்தியாயமான)) மோட்டார் வாகனச் சட்டத்தின் பாகம் VII இன் கீழ், மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட, அத்தகைய சாரதி அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, 2025 ஆம் ஆண்டு

நவெம்பர் மாதம் 25 ஆந் திகதியன்று தொடங்கி 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போதான திகதியொன்றில் காலாவதியாவதற்குள்ள ஏதேனும் சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலப்பகுதியானது, இயைபான சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலத்தின் காலாவதித் திகதியிலிருந்து ஒரு மாத (01) காலத்திற்கு இத்தால் நீடிக்கப்படுதல் வேண்டும்.

EOG 12-0166

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*